தமிழ் நாடு 1974-ம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உரிமை வழங்குதல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 13/1974)

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இச்சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்டமுன் வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(8) அறிவிப்பு

1975-ம் ஆண்டு சக்தி பைப்ஸ் லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/75).

மாண்பமிகுபேரவைத் தலைவர்: 1975-ம் ஆண்டு சக்தி பைப்ஸ் லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 38/75) பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(4). அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி

(உ) 1975-ம் ஆண்டு சக்தி பைப்ஸ் லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/75).

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே,

"1975-ம் ஆண்டு சக்தி பைப்ஸ் நிறுவனம் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 38/75) பேரவையின் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்று முன்மொழிய விழைகிறேன்.

சக்தி பைப்ஸ் நிறுவனம் வார்ப்பு இரும்பு குழாய்கள் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள நிறுவனமாகும். இந் நிறுவனம் பல ஆண்டுகளாக விரயத்தில் இயங்கி வந்துள்ளது. இது கிட்டத்

---

* 1975 அக்டோபர் 25-ம் தேதிய தமிழ்நாடு அரசிதழ் சிறப்புப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

தட்ட மூடப்படும் நிலை ஏற்பட்டது. இந்நிறுவனத் தொழிலாளர்களைப் பாதுகாக்கவும், இதன் உற்பத்தி வசதிகளைத் திறம்படப் பயன்படுத்தவும் தமிழ்நாடு 1969-ம் ஆண்டு நிவாரணத் தொழில் நிறுவனங்கள் (சிறப்பு விதித் துறைகள்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1969) பயனை இந்நிறுவனத்திற்கு மாநில அரசு அளித்துள்ளது. இந் நிறுவனத்தின் இயக்குநர் குழுவும் இதன் பங்குதாரர்களும் நிறுவனத்தின் நிர்வாகப் பொறுப்பையும் 1972-ம் ஆண்டு டிசம்பர் 19-ம் நாளன்று அரசிடம் ஒப்படைத்துள்ளனர். அன்று முதல் அரசு இந் நிறுவனத்தின் நிர்வாகத்தைத் தங்களது நியமனதாரர்கள் மூலம் நிர்வகித்து வருகிறது. இந் நிறுவனத்திற்கு அரசு கணிசமான நிதியுதவிகளையும் அளித்துள்ளது. இந் நிறுவனத்தை விரிவுபடுத்துவதற்கும் கணிசமான அளவிற்குப் புதிதாக முதலீடு செய்ய வேண்டியுள்ளதோடு இந் நிறுவனத்தின் மீது நிர்வாகக் கட்டுப்பாட்டை அரசு தொடர்ந்து செலுத்துவதற்கு வகை செய்யவும் வேண்டியுள்ளது. எனவே, இந்த நிறுவனத்தைக் கையகப்படுத்துவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

இச்சட்ட முன்வடிவு மேற்சொன்ன நோக்கத்தை எய்த விழைகிறது. இதனை ஏற்று நிறைவேற்றித் தருமாறு மாமன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

THIRU N. K. PALANISAMY: Sir, I move the following amendment :—

'That the Sahtki Pipes Limited (Acquisition of Undertaking) Bill, 1975 (L.A. Bill No. 38 of 1975) be circulated for the purpose of eliciting opinion thereon.'

The amendment was duly seconded.

திரு. என். கே. பழனிசாமி: சபாநாயகர் அவர்களே, இந்த சர்க்கார் கொண்டு வந்து இருக்கும் மசோதாவில் இந்த சக்தி பைப்ஸ் நிறுவனத்தை எடுத்துக்கொள்ளும்போது 1 கோடியே 95 லட்சம் ரூபாய் நஷ்ட ஈடு கொடுத்து எடுக்கப் போவதாகச்

1975 நவம்பர் 5] [திரு. என். கே. பழனிசாமி]

சொல்லப்பட்டு இருக்கிறது. நாம் இந்த நிறுவனத்தை எடுத்துக் கொண்டாலும், 1 கோடியே 95 லட்ச ரூபாய் நஷ்ட ஈடு கொடுக்கக் கூடாது என்பது தான்.

அதுமட்டுமல்ல. இவ்வளவு மோசமாக அதை நடத்திய தற்காக அந்த டைரக்டர்களைக் கைது செய்து, அந்தப் பணத்தைப் பூராவும் அவர்களிடத்தில் இருந்து வசூல் செய்ய வேண்டுமென்று சொல்வதற்காகத்தான், இதை பொதுஜன கருத்துக்கு விடவேண்டுமென்று திருத்தம் கொண்டு வந்திருக் கிறேன்.

அவர்களுடைய ஆன்யுவல் ஸ்டேட்மென்ட்டின்படி கிட்டத் தட்ட அவர்கள் போன வருஷம் 1 கோடியே 65 லட்சம் ரூபாய்க்கு சாக்கு விற்று இருக்கிறார்கள். அதில் ஏற்பட்டு இருக்கும் நஷ்டம் ரூ. 69 லட்சத்து சொச்சம். ஆனால் அவர்களுடைய ஆன்யுவல் ஸ்டேட்மென்டிலேயே என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், டிப்ரிஸியேஷனுக்காக ஒதுக்கிய 15 லட்சம் அதிலே சேர்க்கப் படவில்லை. இன்னும் 3 வருஷத்திற்கு இன்கம்டாக்ஸ் கட்டவில்லை. சேல்ஸ் டாக்ஸ் கட்டவில்லை. 1973-74-75 ஆண்டு வரை மின்வெட்டு இருந்தது. மின்சார வெட்டால் எல்லாத் தொழிற்சாலைகளும் பாதிக்கப்பட்டு இருந்தபோது, இதற்கு மின்சாரம் கொடுக்கப்பட்டு இருக்கிறது. அந்த மின்சாரக் கட்டணம் கட்டவில்லை.

In respect of a sum of Rs. 2.70,604. claimed by the Tamil Nadu Electricity Board towards belated payment of surcharges, the company has asked for waiver. அதை ரத்து செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள்.

அது மட்டுமல்ல, பவானியில் ஒரு பகுதியில் மட்டும் 25 லட்சம் ரூபாய்க்கு ஷேர் இருக்கிறது. இப்படி மோசடி செய்து இருக்கும் ஒரு கம்பெனியை சர்க்கார் எடுக்க இருக்கிறோம். தொழிலாளர் களுக்குப் பாதுகாப்பு ஏற்படும் என்ற முறையில் சர்க்கார் எடுப்பதில் நியாயம் இருக்கிறது. அதே போல் எல்லாம் செய்கிறோமா ?

சக்தி டெக்ஸ்டைல்ஸ் மில் மூடிக் கிடக்கிறது. சக்தி சுகர்ஸ் பாக்டரியும் மூடிக்கிடக்கிறது. இந்தியாவிலேயே பெரிய ஆலை அது. ஒரு மில் போதாது என்று இன்னொரு மில்லும் ஓட்டினார்கள். டிரையல் ரன் ஓட்டுகிறேன் என்று சொல்லி, வருகிற கரும்பு எல்லாவற்றையும் வாங்கிக்கொண்டு, பணமும் கொடுக்கவில்லை. இன்னும் ஒரு வருஷத்திற்கு அந்த சக்தி சுகர்ஸ் ஓடாது. அந்த ஒரு வருஷத்திற்குப் பிறகு நடக்குமா, நடக்காதா என்பது தெரியாது. சர்க்கார் அதன் பேரில் கேஸ் போட்டு நடவடிக்கை எடுக்கவேண்டும். ஏற்கனவே தீர்மானம் போட்டோம், மத்திய அரசாங்கத்திடம் அதிகாரம் கேட்டு, சக்தி சுகர்ஸ், சக்தி மில் எல்லாவற்றையும் எடுத்துக்கொள்ளவேண்டும். உ. பி. யில் இரண்டு மில்களை எடுத்து இருக்கிறார்கள். இந்தச் சர்க்காரும் அந்த முறையில் எடுக்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த மசோதா சக்தி பைப்ஸ் பற்றியது, சக்தி சுகர்ஸ் பற்றி அல்ல.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, சக்தி என்றால் இன்னும் எத்தனையோ கனெக்ட் செய்யலாம். ஆகவே, எல்லா சக்தியையும் கனெக்ட் செய்யக்கூடாது. சபை முன்னால் உள்ள பில் மீது மட்டும் பேச வேண்டும். இல்லாவிட்டால் பில்களையெல்லாம் நிறைவேற்ற முடியாது.

டாக்டர் எச். வி. ஹாண்டே: பாயின்ட் ஆப் ஆர்டர் சார், சம்பந்தம் இல்லாது பேசக்கூடாது என்று சொல்கிறார்கள். ஆனால் இந்த சக்தி பைப்ஸ்ஸுக்கும், சக்தி சுகர்ஸுக்கும், சக்தி மில்லுக்கும் ஒரே முதலாளிதான். இன்டர்சேன்ஜ் இன் ஷேர் எல்லாம் இருக்கிறது. ஆகவே, அவரைப் பற்றி சொல்வதற்கு வாய்ப்பு கொடுப்பதுதான் முறையாக இருக்கும்.

திருமதி த. ந. அனந்தநாயகி: ஒரே முதலாளி பல நிறுவனங்கள் வைத்து இருப்பதால் ஒன்றில் இருந்து லாபம் வரும், ஒன்றிலிருந்து நஷ்டம் வரும். அதனால் 'ரிலெவென்ட் அன்ட் கனெக்டட் மேட்டர்' தான்.

1975 நவம்பர் 5]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, அது பொள்ளாச்சி மகாலிங்கத்தையே தேசியமயமாக்குவது என்று இருந்தால் அப்போது பேசலாம். இப்போது குறிப்பிட்ட நிறுவனத்தை தேசிய மயமாக்குவது என்று இருப்பதால் அதைப் பற்றி மட்டும் பேசுவது முறையாகும்.

திருமதி த. ந. அனந்தநாயகி: குறிப்பிட்ட நிறுவனத்திற்கும், பொள்ளாச்சி மகாலிங்கத்திற்கும் தொடர்பு இருக்கிற காரணத்தால் தான், மற்ற நிறுவனங்களைப் பற்றி சேர்த்துப் பேச வேண்டியிருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அந்த நிறுவனத்தைப் பற்றி பேசுங்கள். மகாலிங்கத்தைப் பற்றி பேச வேண்டியது இல்லை. மகாலிங்கம் அவர்கள் உங்களோடு ரொம்ப நாள் தொடர்பு கொண்டு இருந்தவர். இப்போதுதான் நாங்கள் அதை தேசியமயமாக்க இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சக்தி பைப்ஸை நாம் எடுத்திருக்கிறோம். அதைப் பற்றி மட்டும்தான் பேசவேண்டும். மற்ற விவரங்கள், அவர்கள் வீட்டில் எவ்வளவு வருமானம், நிலம் எவ்வளவு இருக்கிறது என்று கேட்டுக்கொண்டிருக்க முடியாது.

திரு. என். கே. பழனிசாமி: தொழிலாளர்களின் பாதுகாப்புக்காக சக்தி பைப்ஸை எடுக்கிறோம் என்று சொல்லுகிறோம். பாக்கியிருக்கின்ற நிறுவனங்களில் இருக்கிற விவசாயிகளுக்கு, பொது மக்களுக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறதே, அவற்றை ஏன் எடுக்கவில்லை? இந்தியா மீட்டர்ஸை எடுத்திருக்கலாம்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நாம் எடுக்கப் போகிறோம் என்று சொல்லி மத்திய அரசாங்கத்திற்கு எழுதியிருப்பதை மன்றத்தில் சொல்லியிருக்கிறோம். இங்கே விவாதிப்பவர்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்லுங்கள், கேட்கலாம்.

திரு. என். கே. பழனிசாமி: சக்திக்கு மூல தனம் 10 கோடி ரூபாய் என்று வைத்துக் கொள்ளலாம். அவர்கள் பொது ஜனங்களிடமிருந்து பங்குத் தொகை வாங்கியது, கடன் வாங்கியது மட்டுமல்ல. இன்னும் தமிழ்நாடு இண்டஸ்டிரியல் இன்வெஸ்டுமெண்ட் கார்ப்பொரேஷன், இண்டஸ்டிரியல் கிரெடிட் அண்டு

இன்வெஸ்டுமெண்ட் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா, இன்டஸ்ட்ரியல் டெவலப்மெண்ட் பாங்க் ஆப் இந்தியா, ஜாயின்ட் ஸ்டாக் கம்பெனி, இன்டஸ்டிரியல் பைனன்ஸ் கார்ப்பொரேஷன், ஸ்டேட் பேங்க் ஆப் ஐதராபாத் ஆகியவற்றிலிருந்தும் கடன் வாங்கியிருப்பதாக அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். கிட்டத் தட்ட 2 கோடி ரூபாய் டர்னோவர் ஆகிறது என்றால், ஒரு கோடிக்கு நஷ்டம் ஆகிறது. அதை சர்க்கார் எடுக்கிறது. அரசாங்கம் துயர் துடைப்புச் சட்டத்தின் கீழ் எடுக்கலாம். அப்படியானால் பல பேர் பணத்தை வாங்கி, கொள்ளையடித்து, சக்கையான பிறகு, அரசாங்கம் எடுப்பதுதான் தேசியமயம் என்றால் என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, அப்படியானால் அதை தேசிய மயமாக்க வேண்டாம் என்பது திரு. பழனிசாமி அவர்களின் கருத்தா?

திரு. என். கே. பழனிசாமி: தலைவரவர்களே, தேசீய மயமாக்குவதை வரவேற்கிறேன் என்று முதலிலேயே சொல்லி விட்டேன். அந்த முதலாளியைக் கைது செய்ய வேண்டும். நஷ்ட ஈடு கொடுக்கக் கூடாது, பணத்தைப் பூராவும் அவர்களிடத்திலிருந்து வசூல் செய்ய வேண்டும் என்பது தான் என்னுடைய வாதம். சர்க்காரின் கொள்கை என்ன? தனியார் துறையில் லாபம் வந்தால், அந்தத் தொழிலை தனியாரிடம் விட்டுவிட வேண்டும். தனியார் தொழிலில் நஷ்டம் ஏற்பட்டால், அதை எடுத்துக்கொள்ள வேண்டும். இதுதான் தேசீய மயமாக்கும் கொள்கையா?

அதுமட்டுமல்ல, இந்த சக்தி பைப்ஸில் ஒரு மானேஜிங் டைரக்டர், ஒரு ஜெனரல் மானேஜர் இருக்கிறார்கள். மானேஜிங் டைரக்டருக்கு வருடத்திற்கு 50.000 ரூபாய் சம்பளம். ஜெனரல் மானேஜருக்கு 62,000 ரூபாய் சம்பளம். மானேஜிங் டைரக்டருக்கு மாதத்துக்கு ரூ. 4.300 சம்பளமாகிறது. ஜெனரல் மானேஜருக்கு மாதத்திற்கு ரூ. 5,100 ஆகிறது. மாண்புமிகு முதலமைச்சர் ராத்திரியும் பகலுமாக வேலை செய்கிறார். அவருக்கு 1500 ரூபாய் தான் மாதச் சம்பளம். (சிரிப்பு).

1975 நவம்பர் 5] [திரு. என். கே. பழனிசாமி]

செக்ரடரி அண்டு சிப் அக்கௌண்டண்டு அவருக்கு வருடத்திற்கு ரூ. 44,220; அதாவது மாதம் ரூ. 3,700. ஓர்க்ஸ் மானேஜர், அவருக்கு வருடத்திற்கு ரூ. 44,411, அதாவது மாதத்திற்கு ரூ. 3,700. இன்னொரு மானேஜர், அவருக்கு வருடத்திற்கு ரூ. 38,482, அதாவது மாதத்திற்கு 3,200 ரூபாய் சம்பளம். பிராஜக்ட் ஆபீசர் அவருக்கு மாதத்துக்கு 2,500 ரூபாய். இந்த 6 ஆபீசர்களுக்கு மட்டும வருடத்திற்கு 2 லட்ச ரூபாய் ஆகிறது. இதிலிருந்து எவ்வளவு கொள்ளை போகிறது என்பதைத் தெரிந்து கொள்ளலாம். பொதுமக்களின் பணம் எப்படி சூறையாடப்படுகிறது என்பதுதான் அதிலுள்ள முக்கிய அம்சமாகும். சர்க்கார் எடுத்துக் கொண்டு தேசிய மயமாக்குவதில் எனக்கு ஆட்சேபனை இல்லை. 1,95,00,000 ரூபாய் நஷ்ட ஈடு கொடுக்கக்கூடாது. இங்கே உள்ள நமது நண்பர் ஒருவர் அந்த நிறுவனத்தில் டைரக்டராக இருக்கிறார், முதலாளி கொள்ளையடிப்பதற்காக ஆளுங்கட்சியில் உள்ள ஒருவரை டைரக்டராக சேர்த்துக் கொள்கிறார். இந்த மாதிரி நடப்பதைத் தடுத்து, சரியானபடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, சக்தி பைப்ஸ் ஆலையை அரசு எடுத்துக் கொள்ளும் மசோதா அவையின் விவாதத்திற்கு வந்திருக்கிறது. கூடவே மூன்று மசோதாக்கள் அறிமுகம் செய்யப்பட்டிருக்கின்றன. நான்கு மசோதாக்கள் பேரிலும் கிட்டத்தட்ட பொதுவான கருத்துக்கள் வரும். சில மசோதாக்களைப் பொருத்த வரையில் தனிப்பட்ட கருத்துக்கள் சொல்ல வேண்டியிருக்கலாம். இதில் நான்கு ஆலைகளையும் எடுத்துக் கொள்வது என்பது பெரிய விஷயம், வரவேற்கத் தக்க விஷயம். தனியாரிடத்தில் இருக்கின்ற ஆலைகளை அரசு எடுத்துக்கொள்வது என்பது சமதர்ம நோக்கம் கொண்ட எவராலும் வரவேற்கத் தக்க விஷயமாகும்.

ஆனால், இந்த ஆலைகளை எடுப்பது என்பது எற்கனவே 1972-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இந்த ஆலைகளின் நிர்வாகம் ரிலீப் அண்டர்டேக்கிங் ஆக்டின் கீழ் அரசாங்கத்தால் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. இப்போது தேசியமயமாக்குகிறார்கள்.

ஏற்கனவே ரிலீப் அண்டர்டேக்கிங் ஆக்டின் கீழ் எடுப்பதற்கு முன்னால், இந்த ஆலைகள் எந்த நிலைமையில் இருந்தன, அவற்றின் நிதி நிலைமை என்ன, மூலதனம் எவ்வளவு, அஸ்ஸட்ஸ் அண்டு லையபிலிட்டீஸ் எவ்வளவு, ஆஸ்திகள் எவ்வளவு, பொறுப்புகள் எவ்வளவு, எந்த அளவுக்கு நிர்வாகம் ஒழுங்காக நடந்திருக்கிறது என்பது நமக்குத் தெரியாது. அதற்குரிய விவரங்கள் இங்கே இல்லை. எடுத்துக்கொண்டதற்குப் பிறகு, 1972-க்குப் பிறகு, எப்படி நடந்திருக்கிறது, அதில் ஏற்பட்டிருக்கின்ற மாற்றம் என்ன, இன்றைக்கு நிதி நிலைமை என்ன, ஆஸ்திகள், பொறுப்புகள் என்ன என்பது பற்றிய விரிவான அறிக்கையை அரசு தந்திருக்க வேண்டும். அப்போதுதான், எடுத்துக்கொள்ளப்படும் தொழிலின் முந்தைய சரித்திரம் என்ன, எதிர்கால வாய்ப்பு என்ன என்பதை மன்ற உறுப்பினர்கள் தெரிந்து கொள்ள முடியும். தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமானது. ஆனால், துரதிருஷ்டவசமாக எந்த மசோதாவிலும் அதுபற்றிய குறிப்பு எதுவும் கிடையாது.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, ஒரு கிளாரிபிகேஷன். இதே அரசாங்கம் கோவையிலிருந்த சிக் மில்களை எடுத்தபோது ஏன் இந்தப் பிரச்னைகள் எழுப்பப்படவில்லை. அந்த மில்களை எடுத்தபோது மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் வரவேற்றிருக்கிறார்கள், பாராட்டியிருக்கிறார்கள், கம்யூனிஸ்டு கட்சித் தோழர்கள்கூட வரவேற்றிருக்கிறார்கள். அப்போது சிக் மில்களைப் பற்றி இந்த விவரங்களை எல்லாம் கேட்டு எடுக்கவில்லை. அதே மாதிரிதான் இப்போதும் அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கிறது.

திரு. ஏ. சுப்பிரமணியம்: உறுப்பினர் வீராசாமி அவர்கள் விவரம் தெரியாமல் சொல்லிவிட்டார். அந்த சிக் மில்களைப் பொறுத்த வரையில் அவைகளை தேசியமயம் செய்யவில்லை அரசு. ரிலீப் அன்டர்டேக்கிங்ஸ் ஆக்டின் கீழ் நிர்வாகத்தைத் தான் எடுத்துக் கொண்டது. அதற்கு என்று ஆய்வுக்குழு போட்டு, அதில் நானும் உறுப்பினராக இருந்தேன். இரண்டு முறை ஆய்வுக் குழு போட்டு, இதைப் பூராவும் ஆராய்ந்தது. நிதி நிலைமை, வர்த்தக நிலைமை, தொழில் நிலைமை இவைகளை

1975 நவம்பர் 5] [திரு. ஏ. சுப்பிரமணியம்]

எல்லாம், டெக்னிகல் ஆஸ்பெக்டஸ், பைனான்ஷியல் ஆஸ்பெக்ட்ஸ் இரண்டையும் ஆராய்ந்து அறிக்கை தயார்த்து அதன் பேரில் தான் நிர்வாகம் எடுத்துக் கொள்ளப்பட்டது.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: திரு. வீராசாமி விவரம் தெரியாமல் பேசிவிட்டதாக திரு. சுப்ரமணியம் சொன்னார். மோசமான தொழிற்சாலைகளைத்தான் எடுத்திருக்கிறோம், நல்ல தொழிற்சாலைகளை எடுக்கவில்லை என்று அரசாங்கம் செய்திருப்பதை தெளிவாகத் தான் திரு. வீராசாமி எடுத்துச் சொல்லியிருக்கிறார். மத்திய சர்க்கார் முதலாளிகளுக்குச் சாதகமாக சட்டம் கொண்டுவந்து, மில்களை நாட்டுக்குச் சொந்தம் ஆக்கிற்று என்று விவரத்தோடுதான் சொல்லியிருக்கிறார்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, அப்படி சட்டம் வரும்போது இந்த அரசாங்கம் பேசாமல் தானே இருந்தது?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மத்திய அரசாங்கம் கொண்டு வந்ததை ஆதரிக்கிறோம், நாங்கள் ஒத்துக்கொள்கிறோம். அவர்கள் கொண்டு வந்த சட்டத்தைப் பின்பற்றித்தான் கொண்டு வந்திருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சுப்பிரமணியம் நாளை தொடர்ந்து பேசுவார். பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று நாளை காலை 9 மணியளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.30 மணியளவில் ஒத்திவைக்கப் பட்டது.

(9) பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders

@ 208. Third Annual Report of the Tamil Nadu Theatre Corporation Limited, Madras for the year ended 31st March 1975. [Laid on the table of the House under section 619 (A) of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

@ Laid on the table of the House on 4th November 1975.